**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 90/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(சக்கரபாணி)**
**23.10.2024**

**3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் லூம் சந்த் சேட் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவருக்கு மொத்தம் எவ்வளவு விஸ்தீர்ணம் சொத்து இருந்தது என்றால் 17 ஏக்கர் சில்லரை இருந்தது.

2. மொத்த சொத்தையும் கிருஷ்ணமூர்த்தி 1964ஆம் வருடம் கிரையம் வாங்கினார். கிருஷ்ணமூர்த்தியிடம் இருந்து விஸ்வநாதன் 1973ஆம் வருடம் 5ஆம் மாதத்தில் கிரையம் வாங்கினார்.

3. நான் விஸ்வநாதனிடம் இருந்து 1973ல் கிரையம் வாங்கினேன். நான் அவரிடம் இருந்து 4000 சதுர அடி கிரையம் வாங்கினேன். 17 ஏக்கர் 67 சென்ட்டில் 4000 சதுர அடி கிரையம் வாங்கினேன். அந்த விவரத்தை தான் வழக்குரை சொத்து விவரத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளேன்.

4. தாவா சொத்தை கிரையம் வாங்கும்போது வில்லங்கம் பார்த்து கிரையம் வாங்கினேனா என்றால் வில்லங்கம் பார்த்துதான் கிரையம் வாங்கினேன். தாவா சொத்தை நேரடியாக பார்த்து கிரையம் வாங்கினேனா என்றால் பார்த்துதான் கிரையம் வாங்கினேன். 100, 150 நபர்கள் கிரையம் வாங்கினார்கள், அதில் நானும் ஒருவர்.

5. தாவா சொத்தின் நான்கெல்லை புதுக்கோட்டை ரோட்டிற்கு மேற்கு, பாரதி மனைக்கு தெற்கு, ரோட்டிற்கு வடக்கு, செல்வராஜ் மனைக்கு கிழக்கு.

6. வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் மொத்த 17 ஏக்கர் 67 சென்டிற்கு 1 நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் புதுக்கோட்டை

ரோட்டிற்கு மேற்கு, பட்டிக்குளத்திற்கு கிழக்கு, புது ஆத்துக்கு தெற்கு, பர்மா காலணிக்கும் வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கும்போதே அந்த இடத்தில் பர்மா காலணி என்ற காலணி இருந்தது என்றும், அங்கு மக்கள் வசித்தார்கள் என்றும் சொன்னால் சரிதான்.

7. ஆரம்பத்தில் தாவா சொத்தின் சர்வே எண் 1பி ஆகும். புது சர்வே எண் 1/1 ஆகும். ஆரம்பத்தில் சர்வே எண் 1பி தான் தற்போது சர்வே எண் 1/1 என காட்டுவதற்கான வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

8. தாவா சொத்தை 1973ல் கிரையம் வாங்கியபிறகு பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். எப்போது பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்தேன் என்றால் 2018ஆம் ஆண்டு மனு கொடுத்தேன்.

9. 2 அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா முதல் அயிட்ட சொத்தில் தாவா 2-வது அயிட்ட சொத்து எந்த பகுதியில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

10. தாவா சொத்தை பொறுத்து எனது பெயரிலோ, எனது மனைவி பெயரிலோ நாளது வரை எவ்வித வருவாய் ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான்.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/-C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.